ஸ்ரீப்பெருமாள் சரித்திரம்.

O22
M19
149466

561

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 NOV 1919
MADRAS

Q22.
M19
169466

உ

சிவமயம்.

8-NOV 1919
MADRAS.

# வீரப்பெருமாள் சரித்திரம்.

இஃது

முன்னோர்கள் செப்புப்பட்டயத்தில்

எழுதிவைத்திருந்ததை

ம-ா-ா-ஸ்ரீ சேனைத்தலைவர்களில் ஒருவராகிய

**மலை-சண்முகசாமி செட்டியாரால்**


சிதம்பரம்

**ஸ்ரீகுஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்**

பதிப்பிக்கப்பட்டது.

4—11—1919.

2375
922.945
KP7
N19
149466



உ

சிவமயம்.

# வீரப்பெருமாள் சரித்திரம்.

சொஸ்த ஸ்ரீ மகாமண்டலேஸ்வரன் அரியருய
தளவிபாடன் பாழைக்கூத்த பூவருயகண்டன் நவ
கண்டன் மண்டலி காளகண்டன் மூவருயகண்டன்

சண்டப்பிரச்ண்டன் உத்தண்ட கோரத்தன் மாதாளா சண்டன் கண்டநாடுகொண்டு கொண்டநாடு கொடா தான் கோதண்டராமன் எம்மண்டலமும் கொண்டு யீழந்துரை கண்டருளிய ராசாதிருசன் ருசபரமேஸ் வரன் ருசமார்த்தாண்டன் ருசகெம்பிரன் ருசமனோ கரபயங்கரன் அலுக்கர் மோகம் தவிழ்த்தோன் அலுக்கர் தளவிபாடன் ஒட்டியர் தளவிபாடன் ஒட் டியர் மோகம் தவிழ்த்தோன் அஷ்டபோக துறந் தரன் ஆதா சூர வீர விக்கிரமார்த்தாவதாரன் பூர்வ தெக்ஷிண பச்சிம உத்தர சமுத்திராதிபதி அச வேட்டை கெஜவேட்டை கண்டருளிய கெடிய மன்னன் காலாந்தகன் லெக்ஷிமிநிவாசகன் உறங்கும் பெருமாளுக்கு உலாவும் பெருமாள் ஆக்கினைக்கி சுக்கிரிபன் பிரதிக்கினைக்கி பரசுராமன் அசுபதி கெசபதி நரபதியான பிரவுட தேவ மஹாராயர் மல்லிகார்ச்சுன தேவமஹாருயர் அச்சுத தேவமகா ருயர் விருப்பாட்சி தேவமகாருயர் வாமதேவ மகா ருயர் நரசிம்மதேவ மகாருயர் திருமக்கித்தேவ மகா ருயர் கிஷ்ணதேவ மகாருயர் ருமதேவமகாருயர் சதாசிவதேவ மகாருயர் பிரிதிவு ருச்சியம்பண்ணி அருளாநின்ற சாலிபவாகண சகாப்தம் 1439. கலி

யார்த்தம் 4596. இதின்மேல் செல்லாநின்ற தாது வருஷம் வைகாசிமீ 12உ சோமவாரநாள் பூச நக்ஷத்திரம் அமாவாசை சுபநாமயோகமும் கோச வாகரணமும் கூடிய சுபதினத்தில் பூலோககைலாச மாகிய சிவசிதம்பரத்தில் இரண்ணியவன்மனுக்கு வெண்குட்டம் தீர்ந்த சிவகெங்கையாகிய தில்லைவன த்தில் தில்லைமூவாயிரவாள் எழுந்தருளியிருக்கிற அழகிய திருச்சிற்றம்பலமுடையார் திருக்கையா லெழுதிய திருச்சிற்றம்பலக்கோவை பாடியருளிய மாணிக்கவரசகமூர்த்தியும் திருநாளைப் போவாரும் சரீரத்துடனே கனகசபையில் அயிக்கியமான தில்லை வனத்தில் திருநீலகண்டர் பேருபெத்த திவ்யமான நக்ஷத்திரத்தில் தெரிசித்தபேருக்கு முத்தியென்று சிவன் முக்காலும் அருளிச்செய்த தில்லைவனத்தில் புக்கார்தாமே யென்று மூவர் வேதப்பட்ட சிவ ருசதானியான தில்லைவனத்தில் பதஞ்சலி வியாக்கிர பாதருக்காக பரதநாட்டியஞ்செய்த பழய தில்லை வனத்தில் ருசாதிருசன் ருசவளநாடு வெண்ணையூர் வழுதலம்பட்டு சாவடி தினியூர் பெரும்பற்றப்புலியூர் தில்லைவனநாயகியான திரிபுரானந்த திரிசூலியம்மை எழுந்கருளி வரப்பட்ட திருத்தேர் வோடாமல்

நின்றபடியினாலே சேரன் சோழன் பாண்டியன் என்று மூன்று அரசர்களும் தானும் பரிகலம் பதினாயிரம் பேருங்கூடி ஆலோசிக்கிறபொழுது அப்போது நரபெலி கொடுத்தாலொழிய தேர் வோடா தென்று பிராமணப்பெண்பேரில் தில்லைவனநாயகி பிரசன்னமாய் உத்தரவுசெய்தபிறகு மூன்று ராசாக் களுங்கூடி ஆலோசனைபண்ணி யாதாமொருவர் நர பெலிகொடுக்க இசைந்தார்களோ அவர்கள் நின்ற நிறை பொன்னும் கொடுத்து அவர்கள் கேட்ட மனுவுகளெல்லாம் கொடுக்கிறோமென்று பொன் னொருதட்டும் பூவொருதட்டும் அனுப்பி சேகண்டி போடச்சொல்லி பிருமரிக்குமிடத்திலே சகல சாதிக் குள் ஒருவரும் கிடையாமல்போனபடியினாலே மூன் னாள் வொருதரம் தேர்வோடாமல் நின்றபடியினாலே சிதம்பரபட்டணத்திலுள்ள வீடுகளெல்லாம் வேகத் தலைப்பட்டது. வைசூரி முதலான வியாதிகளெல் லாம் வரத் தலைப்பட்டது. இன்னம் தேர்வோடா மல் நின்றால் என்னபாடு படுமோ தெரியாதென்று நித்திரை ஆகாரமில்லாமல் தவித்துக்கொண்டு இருக் கிறபோது பரமேஸ்வரன் வாமபாகத்தில் எழுந் தருளியிருக்கிற பார்வதிதேவியார் பாதச்சிலம்பில்

பிறந்தோர் வீரபாகுதேவர் முதலான ஒன்பதுபேர்
களும் உயர்குலத்துதித்தோன் சண்முகக்கடவுள்
கோத்திரமாகிய நவமணிமடந்தையர் நாவினில் பிறந்
தோன் சூரனிடத்தில் தூதுசென்றவர்கள் தேவேந்
திரன் அனுப்பும் பொன்சிங்காசனத் திருந்தோன்
சூரனைவென்று தேவர் சிறைமீட்டோன் பட்டமானம்
பழுதரக்காத்தோர் யேவிலங்காதோர்வீரசெங்குந்தர்
மென்மிசையாளர் காளிகைப்பிடித்தோர் காலனுக்கு
கொலைவிட்டோர் ஆணுக்காணுய்பிறந்தோர்செம்மை
யிற்புலித்தண்டை சேகண்டியுடையோற்கு போனை
கண்டோர் கொல்லியம்பாவையைச் சிறையில்வைத்
தோர் பாகசாதனனைப்பணிவிடைகொண்டோர் ஆனை
கட்ட கம்பமாய்நின்றோர் சோழன்குமாரனை சொட்
டயால்வென்றோர் வீரபுலிக்கொடி விருதும்படைத்
தோர் வாகமாலையும் காந்தமாலையும் விக்ஷிமாலையும்
முல்லைமாலையும் ஆத்திமாலையும் தண்டமாலையும்
படைத்தோர் வல்லாளனைவென்று கொல்லாமல்விட்டு
வல்லாளதேவிக்கி மடிப்பிச்சை மங்கிலியப்பிச்சை
கொடுத்தோர் பொய்த்தலைக்கி மெய்த்தலைகொடுத்
தோர் இப்படிக்கொத்த குலமும் கோத்திரமும் வரி
சையும் வண்மையும் விருதும் படைத்த தில்லைநாயகி

பாதசேகரர்சேனைக்காவலர் சேனைத்தலைவர்குலத்தில் பண்முலைவாழும் பாக்கன் பழயகாயன் குமாரன் சிமந்த புத்திரன் வீராதிவீரன் வீரப்பெருமாள் உபய குலசுத்தனுமாய் ஒருதாய்க்கி ஒருபிள்ளையுமாய் அங்கயீனமில்லாதவனுமாய் திருப்பாலவனுமாய் கல்வியுமானமுமாய் வரப்பட்ட வீரப்பெருமாள் சேரன் சோழன் பாண்டியன் தானும் பரிகலத்தாரையும் பார்த்து பொன்னும்வேண்டாம் பூவும்வேண்டாம். நான் நரபெலிகொடுக்கிறேன். நான்கேட்ட மனுவுகள் தாருங்களென்று வீரப்பெருமாள்சொல்ல அப்பொழுது மூன்றுராஜாக்களும் கூடி சந்தோஷமாய் நீகேட்ட மனுவுகளெல்லாம் தருகிறோம் இன்னதென்று சொல்லுமென்று ராசாக்கள் சொல்ல அப்பொழுது வீரப்பெருமாள் சொன்னது என்னுடைய குலமான சேனைத்தலைவர் இருக்கிற ராஜவீதியில் எழுபது மனையும் கலியாணத்திற்கு வலங்கைக்கு உண்டான வரிசையும், திம்மைக்கி பாடை பல்லக்கு எரிபாவாடை நடபாவாடை இதெல்லாம் தில்லைநாயகி சன்னிதியிலிருந்து தீர்த்தம் திருமாலை இடை பரிவட்டம் சந்தனம் விபூதி இதெல்லாம் பண்டாரங்கள் கொண்டுவரவேணும். தில்லைநாயகியார் சன்னதிக்

14946.

கெதிரே ஆக்ஷேபமில்லாத கடலையும் இப்படிப்பட்ட வரிசைகளெல்லாம் கேட்க அப்போது மூன்றுராசாக்களும் சந்தோஷமாய் அப்புறம்உறவின்முறையாரை அழைத்து எனக்கு என்னவரிசைக்கட்டளை இடுகிறீர்கள் என்று கேட்கும்போது உறவின்முறையார் எல்லாரும் சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ்செய்து தேவரீர் கேட்டதெல்லாம் தருகிறோம் இன்னதென்று கட்டளையிடுங்களென்று உறவின்முறையார் சொல்ல அப்போது வீரப்பெருமாள் சொன்னது பொதிக்கு ஒரு படிநெல்லும் பொதிக்கு ஒருதேங்காயும் வாழைச் சுமைக்கொருசீப்பு வாழைக்காயும் பாக்கு சுமைக்கி அன்பதுபாக்கும் வெற்றிலை சுமைக்கி அரைக்கட்டு வெற்றிலையும் மற்றுமுண்டான பொதிக்கொரு தூண்டும் கலியாணத்திற்கு மாப்பிளைவீட்டுக்கு ஒருபணமும் பெண்வீட்டுக்கு ஒருபணமும் வருஷத்திற்கு எங்கும் எந்தெந்த ஊரிலேயும் தலைசீட்டுக்கு ஒரு பணமும் வைத்து தரவேணும். தில்லைநாயகிகோவிலுக்கு திருமாலை பூசைநிவேத்தியம் நந்தவனம் செங்கழுனீரோடை இந்த தர்மங்களெல்லாம் உங்களாலே நடக்கவேணுமென்று கேட்க அந்தப்படி நடத்திவருகிறோமென்று உறவின்முறையார் சொல்ல அப்பொ

ழுது வீரப்பெருமாளானவர் இந்த தருமத்தைவிடா மல் நடத்திவந்தவர்கள் நான்பெற்ற பேரும் பெறு வார்கள். இந்த தருமத்திற்கு யாராவது விக்கினம் பண்ணினபேர்கள் கங்கைக்கரையிலே காராம்பசுவை க்கொன்ற தோஷத்திலே போவார்கள். சிசு அத்தி பண்ணின தோஷத்திலே போவார்கள். சிவகெங்கை யிலே பிராமணனைக்கொன்ற தோஷத்திலே போவார் கள். ரௌரவாதி நரகத்தில் விழுவார்களென்று தரு மசர்சன பட்டயத்தில் எழுதி வைத்துக்கொண்டு கோவில்பூசை பண்ணுகிற பண்டாரத்தைத் தேடுகிற பொழுது அதில் யோக்கியராயிருந்த ஈஸ்வரபிள்ளை மாத்திரம் பொன்விளைந்தகளத்தூருக்குப்போய் சிறி துநாள் அவ்விடத்திலேதானே இருந்துவிட்டார். அப்பொழுது அவருக்குசமாசாரம்போய் கோபத்தை தெளியவைத்து இட்டுக்கொண்டுவந்து அதன்பிறகு சேரன் சோழன் பாண்டியன் என்னும் மூன்றுராஜா க்களும் ஈஸ்வரபிள்ளைமகன் தில்லாண்டா பண்டார த்தை அம்மனுக்கு பூசைபண்ணுகிறதாக நியமித்து வைத்து அதின்பிறகு வீரப்பெருமாளானவர் ஈஸ்வர ப்பிள்ளை மகன் தில்லாண்டபண்டாரத்துக்கு அநேக உபசாரஞ்செய்து செப்போடும் சிலாசாதனமும் வீரப்

பெருமாள் தன்கையிலெடுத்து தில்லையாண்டபண்டாரத்துக்கு தெற்குமுகப்பண்ணி நீங்கள் சந்திர சூரியர் உள்ளவரைக்கும் பிரமரித்து வாருங்களென்று கட்டளையிட்டுவைத்து அதின்பிறகு சிவகங்கையிலேபோய் ஸ்நானம்பண்ணி அனுஷ்டானமுடித்துக்கொண்டு அம்பலவாணசுவாமியையும் சிவகாமியம்மையாரையும் கனகசபையையும் தெரிசனம்பண்ணி அப்பால்வந்து அன்னதானம் சொர்ணதானம் வஸ்திரதானம் பூதானம் கன்னிகாதானம் முதலிய இப்படிப்பட்ட தர்மம் பலஉபகாரமும் செய்து நரபெலி கொடுக்கவருகையிலே கண்டபேர்கள் சொல்வதானது அழகைப்பாரென்பாரும் ஆண்மையைப் பாரென்பாரும் கொழுந்திலே வைரம்பற்றினாற்போல் சிறுபிள்ளையினுடைய துணிவைப்பாருமென்பாரும் இப்படி சகலமான ஜனமும் தோத்திரம்பண்ணி தெருவீதியெங்கும் சந்தனக்குழம்பை வாரியெறிகிறபேரும் புஷ்பமாரி பொழிகிறபேரும் சகலஜனமும் சூழ்ந்து தில்லைநாயகி திருத்நேர் முன்பாகவந்துநின்று உன்னுடைய ஆலயத்தில் என்னை தடுத்தாட்கொண்டு சிலையாகநிறுத்தி உனக்கு பூஜை நைவேத்தியம் நடப்பதுபோல் அடியேனுக்கும் நடக்கத்தக்கதாக திருவுளம்புரிய

வேணும். இதல்லாமல் எந்தெந்த ஸ்தலத்திலேயாகிலும் தேர் ஓடாமல் நின்றால் அடியேன்பேரை நினைத்து வீரப்பெருமாளென்றவுடனே தேரோடிப்போக வரந்தரவேணுமென்று கேட்டுக்கொண்டு அதின் பிறகு அட்டகாசம்பண்ணி அல்லல்கொட்டி பல்லைக் கடித்து தில்லைநாயகியை தோத்திரம்பண்ணி வலக் கையில் பிடித்த உடைவாளினாலே தலையை அரிந்து இடதுகையில் ஏந்திக்கொண்டு சன்னதிக்கெதிரே நடந்துக்கொண்டுபோய் வைத்து குறையுடலும் கும்பிட்டுநின்றான் வீராதிவீரன் வீரப்பெருமாள். அப்பொழுது திருத்தேர் அதிகவேகமாய் சுறுக்காய் நடந்து திருநிலையை நின்றது.

முற்றிற்று.

7B
7-26